1970 ஆகஸ்ட் 25]

reveal that these flowers were used to be taken to the Mysore Palace Srirangapuram because the ladies there liked the jasmine flowers of Hosur. Under these circumstances, if modern technique of cultivation is taught and helped, the ryots will take to this cultivation. Will the Government re-examine the whole thing and see that justice is done to Hosur taluk?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மல்லிகையின் நல்ல குணத்தைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அவரது இடமான ஹோசூரில் அதற்கு நல்லவிதமான நிலை இல்லை. பூச்சித் தாக்குதல்களுக்கு அதிகமான அளவில் அந்தப் பக்கத்தில் அந்தச் செடிகள் ஆளாகின்றன. அங்குள்ள விவசாயிகள் இந்த மல்லிகையைப் பயிரிடுவதை விட அதிகமாக விரைவில் விலை போகக் கூடிய சாமந்திப் பூவைத்தான் பயிரிட விரும்புகிறார்கள். அது இல்லை என்றாலும் காய்கறிகள் பயிரிட விரும்புகிறார்கள். இந்த நிலை எல்லாம் மாறினால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் மல்லிகையில் அதிகக் கவனம் செலுத்தி அதை வளர்க்கலாம்.

Untouchability

* Q.—10. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(a) whether the practice of untouchability has been put as a penal offence under the Government Servants' Conduct Rules in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

சலவைத் தொழிலாளர் கோரிக்கைகள்

* வினா 11. **திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீண்ட காலக் கடன் உதவி அளிக்கக் கோரி சலவைத் தொழிலாளர்களிடம் இருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இக் கோரிக்கைகளை அமுல் படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம். கோரிக்கைகள் வந்துள்ளதாகப் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.